# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## புலமைச் சொத்து (திருத்தம்)

***2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*வர்த்தக அமைச்சர் அவர்களால் 2020, நவெம்பர் மாதம் 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, ஓகத்து மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***13 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தில் உட்புகுத்தப்பட்ட புதிய 12அ என்னும் பிரிவின் விளைவாந்தன்மையினவாறான குறித்தசில புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், குறித்தசில ஆக்கங்களின் பிரதிகளை அணுகுவதற்கு எவரேனும் பயனுகர் ஆளை இயலச்செய்வதற்கென முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 12அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும்.

## புலமைச் சொத்து
## (திருத்தம்)

ச.வ. - ஒ. 11/2016

### 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, புலமைச் சொத்து (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2**. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

2003ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) ''செவிப்புல கட்புல ஆக்கம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

'' ''அணுகத்தக்க வடிவம்'' என்பது, பயனுகர் ஆளொருவர் எந்த இயலாமையைக் கொண்டுள்ளாரோ அந்த ஏதேனும் இயலாமையைக் கொண்டிராத ஆளொருவரைப் போன்று சாத்தியமான முறையிலும் வசதியாகவும் அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு அத்தகைய ஆளுக்கு அனுமதியளித்தலுட்பட, பயனுகர் ஆளுக்கு அத்தகைய ஆக்கத்துக்கு அணுக்கத்தைக் கொண்டிருக்கின்ற மாற்றுப் படிவத்திலான அல்லது முறையிலான ஓர் ஆக்கத்தின் பிரதி என்று பொருளாகும். அணுகத்தக்க வடிவத்திலான பிரதி பயனுகர் ஆட்களினால் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் மாற்றுப் படிவத்தில் ஆக்கத்தை அணுகத்தக்கதாக்கு

வதற்குத் தேவைப்பட்ட மாற்றங்களும் பயனுகர் ஆளின் தேவைகளுக்கான அணுக்கத்தன்மையையும் கவனத்துட்கொண்டு மூல ஆக்கத்தின் தராதரத்திற்கு மதிப்பளித்தலும் வேண்டும்;''.

(2) ''ஆக்குநர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

" ''பயனுகர் ஆள்'' என்பது, வேறேதேனும் இயலாமையைப் பொருட்படுத்தாது-

(அ) குருடாகவுள்ளவரான ; அல்லது

(ஆ) கட்புலப் பாதிப்பு அல்லது பார்வை சார் அல்லது வாசிப்பதற்கான இயலாமை எதுவுமில்லாதவரான ஆளொருவருக்குக் கணிசமானளவு சமமாகவுள்ள கட்புலச் செயலாற்றுகையைக் கொடுப்பதற்குச் சீராக்கப் படமுடியாத அத்தகைய பாதிப்பை அல்லது இயலாமையைக் கொண்டுள்ளவரான மற்றும் பாதிப்பு அல்லது இயலாமையைக் கொண்டுள்ள ஆளொருவரைப் போன்று கணிசமானளவு அதே மட்டத்துக்கு அச்சிடப்பட்ட ஆக்கங்களை வாசிப்பதற்கு இயலாதுள்ளவரான ; அல்லது

(இ) உடலியலாமை காரணமாக வாசிப்பதற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுக்கு ஒரு புத்தகத்தை கையில் வைத்திருப்பதற்கு அல்லது புரட்டுவதற்கு அல்லது கூர்ந்து நோக்கு

வதற்கு அல்லது கண்களை அசைப் பதற்கு வேறுவகையில் இயலாதுள் ளவரான,

எவரேனுமாள் எனப் பொருள்படும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 12அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை இத்தால் உட்புகுத்துவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"பயனுகர் ஆளொரு வருக்கு வசதியளிப்ப தற்காக ஏதேனும் அதிகார மளிக்கப்பட்ட உருவகத்தினால் ஆக்க மொன்றின் நியாயமான பயன்பாடு.*

12அ. (1) (அ) இப்பாகத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மீள்பதிப்பித்தல் பயனுகர் ஆளின் சொந்தப் பயன்பாட்டிற்கென, கல்விசார் நோக்கத்திற்கென அல்லது ஆராய்ச்சிக்கென பிரத்தியேகமாக செய்யப்படுகின்றவிடத்தும், அத்தகைய ஆக்கத்தின் மூல வடிவம் அத்தகைய ஆட்களினால் அதன் துய்த்தலை தடுக்கின்ற விடத்தும், அத்தகைய ஆக்கத்தின் எவரேனும் வேறு ஆளுடன் பகிர்தலுட்பட அத்தகைய ஆக்கத்தை அணுகுவதற்கு அத்தகைய பயனுகர் ஆளுக்கு வசதியளிக்கும் நோக்கில் பயனுகர் ஆளொருவரின் நன்மைக்கென அணுகத்தக்க வடிவமொன்றில் ஏதேனும் ஆக்கத்தை இசைவாக்கலாம், மீளப்பதிப்பிக்கலாம் மற்றும் அதன் பிரதிகளை வழங்கலாம். அவ்வதிகாரமளிக்கப்பட்ட உருவகத்தினால் ஏதேனும் ஆக்கம் இசைவாக்கப்படுதல், மீளப்பதிக்கப்படுதல் மற்றும் அதன் பிரதிகள் வழங்கப்படுதல், பதிப்புரிமையின் மீறுகையாக விருத்தலுமாகாது.

(ஆ) பந்தி (அ) வின் ஏற்பாடுகள், ஏதேனும் ஆக்கம் நியாயமான நியதிகளின்கீழ் அத்தகைய அணுகத்தக்க படிவத்தில் வர்த்தக ரீதியில் கிடைக்கக்கூடியதாக இராதவிடத்து மட்டுமே அத்தகைய ஆக்கத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

அத்தகைய பட்சத்தில், அமைச்சர், அத்தகைய ஆக்கத்துக்கான, விடயத்துக்கேற்ப, வரையறைகளை அல்லது விதிவிலக்குகளை வெளிப்படுத்தி, உலகப் புலமைச்சொத்து ஒழுங்கமைப்பின் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் அறிவிப்பொன்றை இடுதல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட உருவகமொன்று-

(அ) புலமைச்சொத்துப் பணிப்பாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய ஆட்களாக அல்லது ஒழுங்கமைப்புகளாக இருத்தல் வேண்டும்;

(ஆ) அணுகத்தக்க படிவத்திலுள்ள ஏதேனும் ஆக்கத்தின் பிரதிகளை, அணுகத்தக்க படிவத்திலுள்ள அத்தகைய ஆக்கத்தின் தயாரிப்புக்கான ஆகுசெலவை மட்டும் அறவிட்டு இலாப மீட்டா அடிப்படையின்மீது எவரேனும் பயனுகர் ஆளுக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதல் வேண்டும்;

(இ) அணுகத்தக்க வடிவத்திலுள்ள ஆக்கத்தின் எவையேனும் பிரதிகள் பயனுகர் ஆளொருவரினால் மட்டுமே பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், வழமையான தொழில் வழிமுறைகளினுள் அது பிரவேசிப்பதனைத் தடுப்பதற்கு நியாயமான நடபடிகளை எடுத்தலும் வேண்டும்;

(ஈ) எவரேனும் பயனுகர் ஆளுக்கு அல்லது பயனுகர் ஆளின் சார்பில் செயலாற்றுகின்ற வேறெவரேனும் ஆளுக்கு ஏதேனும் ஆக்கத்தை இசைவாக்குவதற்கு, மீளப்பதிப்பதற்கு மற்றும் அதன் பிரதிகளை வழங்குவதற்கு மட்டுமே அணுகத்தக்க வடிவத்திலுள்ள ஆக்கங்களினது பிரதிகளின் வழங்குகையை வரையறுத்தல் வேண்டும்;

(உ) அணுகத்தக்க வடிவத்திலுள்ள ஆக்கத்தின் அதிகாரமளிக்கப்படாத பிரதிகள் மீளப்பதிப்பிக்கப்படுவதனை, விநியோகிக்கப்படுவதனை மற்றும் கிடைக்கக்கூடியனவாக்கப்படுவதனை ஊக்கம் இழக்கச்செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) பயனுகர் ஆளொருவரின் அந்தரங்கத் தன்மைக்கு மதிப்பளிக்கும் அதேவேளையில் அணுகத்தக்க வடிவத்திலுள்ள ஆக்கத்தின் பிரதிகளை கையாள்வதில் உரிய கவனத்தைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், அவற்றின் கையாளுகை பற்றிய பதிவேடுகளைப் பேணுதலும் வேண்டும்.”.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.